செய்தி வெளியீடு எண். 280 நாள்.23.05.2013

**<u>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் வருவாய்த்துறையின் மீதான அறிவிப்புகள் மற்றும் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வரும் வறட்சி நிவாரணப்பணிகள் குறித்து வருவாய்த்துறை அமைச்சர் தலைமையில் ஆய்வுக்கூட்டம்.</u>**

அண்மையில் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருவாய்த்துறையின் மீதான அறிவிப்புகள் அதன் செயல்பாடுகள் மற்றும் போர்க்கால அடிப்படையில் நடைபெற்றுவரும் வறட்சி நிவாரணப் பணிகளின் செயல்பாடுகள், மக்களிடம் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ள 'அம்மா' திட்டம் ஆகியவை குறித்த ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. 'தோப்பு' என்.டி. வெங்கடாசலம் அவர்கள் தலைமையில் இன்று (23.05.2013) எழிலகம், வருவாய் கருத்தரங்க கூடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருவாய்த் துறையின் முதன்மைச் செயலர் (பொ) திரு. ராஜீவ் ரஞ்சன் இ.ஆ.ப., கூடுதல் தலைமைச்செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் டி.எஸ் ஸ்ரீதர், இ.ஆ.ப., முதன்மைச் செயலர்/ நில நிருவாக ஆணையர் திருமதி கிரிஜாவைத்தியநாதன்,இ.ஆ.ப., நிலஅளவை மற்றும் நிலவரித் திட்டத்துறையின் முதன்மை செயலர் / ஆணையர் திரு.ரமேஷ்ராம் மிஷ்ரா, இ.ஆ.ப., நில சீர்திருத்தத்துறையின் முதன்மைச் செயலர் / ஆணையர் திருமதி ஜெயஸ்ரீ ரகுநந்தன், இ.ஆ.ப., நிலசீர்திருத்த இயக்குநர் திரு. ஜெ.சந்திரகுமார், இ.ஆப., நகர்புற நிலவரி மற்றும் நில உச்சவரம்பு துறை ஆணையர் திரு. பி. அண்ணாமலை இ.ஆ.ப., வருவாய் நிருவாக இணை ஆணையர் முனைவர் மு.ஜெயராமன் இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தமது தலைமையுரையில், கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், வருவாய்த்துறை தொடர்பான அறிவிப்பில், 'அனைத்துத் துறைகளுக்கும் தாய்த் துறையாகவும், அரசாங்கத்தின் முதுகெலும்பாகவும், ஏழை எளிய மக்களின் துயர்களை களைந்து, அவர்களை ஏற்றிவிடும் ஏணியாகவும் விளங்குகின்ற வருவாய்த்துறையின் செயல் திறனை மேம்படுத்தும் வகையில், பல முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டு, வருவாய்த்துறையின் வரலாற்றில் இதுவரையில் இல்லாத அளவில், ஏழை எளியோரின் நலனைக் கருத்தில் கொண்டு, பல அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள்.

குறிப்பாக, நடப்பாண்டில் 25 புதிய வட்டங்கள், தவிர கடந்த ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட 9 வட்டங்களையும் சேர்த்து 34 வட்டங்கள். 6 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்ககள் கட்ட 16.74 கோடி நிதி ஒதுக்கீடு. 20 வருவாய் ஆய்வாளர்களுக்கு தலா 14.16 லட்சம் ரூபாய் செலவில் குடியிருப்புடன் கூடிய அலுவலக கட்டடங்கள். பொது மக்கள் குறு வட்ட அளவர்களை எளிதில் அணுகிட ஏதுவாக, 100 குறு வட்டங்களில், தலா 14.16 லட்சம் ரூபாய் செலவில், அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள். 114 கிராம நிருவாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடங்கள் கட்ட 9.36 கோடி நிதி ஒதுக்கீடு. 25 கோடி ரூபாய் செலவில், 5,000 கிராம நிருவாக அலுவலக கட்டங்கள் என எண்ணற்ற அறிவிப்புகளை வாரி வழங்கியுள்ளர்கள் என்றால் அது மிகையில்லை. இத்திட்டங்களை செயல்படுத்திட பூர்வாங்க பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பணிகள் அனைத்தும் உரிய நேரத்தில் முடிக்கப்பட்டு, அவையாவும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட வேண்டும். அதற்கு அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றி, நமது வருவாய்த்துறைக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் பெருமையினைத் தேடித்தர வேண்டுமாறு அனைவரையும் கேட்டுக் கொண்டார்கள்.

மேலும், இந்தியாவிலேயே முதன்முறையாக, பிற மாநிலங்களுக்கு எல்லாம் வழி காட்டிடும் வகையில், பயிர் இழப்பீட்டிற்காக மட்டும் ஏறத்தாழ, 1,376.71 கோடி ரூபாய் உடனடி நிவாரண உதவித் தொகை வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். தவிர, பாதிக்கப்பட்டுள்ள விவசாயப் பெருமக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில், ஏறத்தாழ 2,551.75 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு தொலை நோக்குத் திட்டங்களை அறிவித்துள்ளார்கள்.

அதனடிப்படையில், டெல்டா மாவட்டங்களைச் சார்ந்த 3,52,613 விவசாயிகளுக்கு 524 கோடியே 25 லட்சம் ரூபாய் நிவாரண உதவியாக, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. டெல்டா அல்லாத ஏனைய பிற மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ள 17,94,432 விவசாயிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 835 கோடியே 21 லட்சம் ரூபாயில், நாளது வரையில், 8,48,719 விவசாயிகளுக்கு நிவாரண உதவித்தொகையாக 364 கோடியே 89 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள நிவாரணத் திட்டங்கள் அனைத்தும் உரிய நேரத்தில்; உரிய மக்களைச் சென்றடைந்திட வேண்டும் என்பதை நாம் அனைவரும் கருத்தில் கொண்டு, அர்ப்பணிப்புடன் பணியாற்றிட வேண்டும் .

பள்ளி மாணவ மாணவியர்களின் மேற்படிப்பினை கவனத்தில் கொண்டுள்ள நமது முதலமைச்சர் கடந்த 8.05.2012 அன்று சட்டப்பேரவையில், மாணவ மாணவியர்களுக்குத் தேவையான சாதிச் சான்றிதழ், பிறப்பிடச் சான்றிதழ் மற்றும் வருமானச் சான்றிதழ் ஆகியவற்றை தாம் பயிலும் பள்ளிகள் மூலமே பெற்றிட வழிவகை செய்யப்படும் என்று அறிவித்தார்கள். அதனடிப்படையில், 2012 –2013 ஆம் கல்வியாண்டில், 8.79 லட்சம் மாணவ மாணவியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு கல்வியாண்டிலும் 6ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர்களுக்கு தாம் பயிலும் பள்ளியிலேயே தேவையான சான்றிதழ்கள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாளது வரையில், மாநிலம் முழுதும் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையில் பயிலும் 15,18,863 மாணவ மாணவியரிடமிருந்து பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களில் தகுதியுள்ள 14,63,780 மாணவ மாணவியர்களுக்கு உரிய சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இப்பணிகள் அனைத்தும் தொய்வின்றி மேற்கொள்ள, ஒவ்வொரு வட்டத்திலும் துணை வட்டாட்சியர், மற்றும் ஒரு இளநிலை உதவியாளர் பணியிடங்கள் பிரத்தியேகமாக வழங்கப்பட்டுள்ளன. மேலும், தேவையான சான்றிதழ்களை இருப்பில் வைத்துக் கொள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் அறிவுறுத்தப் பட்டுள்ளார்கள் என்றும், ஆண்டுக்கு ஒரு இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை விஞ்சி கடந்த இரண்டாண்டுகளில் 2.53 லட்சம் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதும், மிகவும் குறுகிய காலத்தில் அறிமுகம் செய்யப்பட்டு மக்களிடம் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ள ‘அம்மா’ திட்டத்தின் கீழ் இது வரையில் 4.50 இலட்சம் மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளதும் வருவாய்த்துறையின் வரலாற்று சாதனை என்று தமது உரையில் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**